தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06.

ந.க.எண்:053643/எம்1/இ1/2025 நாள்: 05.09.2025

பொருள் : பள்ளிக்கல்வி – பள்ளி மாணவர்களுக்கு இடையேயான சாதிய ரீதியான மோதல்களை தடுக்கவும் மாணவர்களிடையே சமத்துவம், சமூக நீதி மற்றும் ஒற்றுமை எண்ணங்களை வளர்க்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்துதல் – சார்பு

பார்வை 1 அரசாணை(நிலை) எண்:152, பள்ளிக் கல்வித் (பொது1(2)) துறை, நாள்: 23.08.2023

2 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்:053643/எம்1/இ1/2024,நாள்:25.06.2025

3 அரசு இணைச்செயலர் பள்ளிக்கல்வி, தலைமைச்செயலகம், கடிதம் எண்:3348/GI1(2)/2025-3, நாள்:26.08.2025.

****

பார்வை 1 இல் காணும் அரசாணையில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே சாதி இன உணர்வுகள் காரணமாக உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும் வழிமுறைகளை வகுக்கவும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.கே.சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து அரசால் ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையின் அடிப்படையில் மேற்படி ஒரு நபர் குழுவானது தனது அறிக்கையினை 18.06.2025 அன்று அரசுக்கு சமர்ப்பித்ததுள்ளது.

மேற்படி ஒரு நபர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையினை , 18.08.2025 அன்று அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டிய பரிந்துரைகளின் மீது உடன் உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் விவரங்கள் பார்வை 3 இல் காணும் அரசு கடிதத்தின் வழி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், சாதிய ரீதியான மோதல்களை தவிர்க்கவும் , மாணவர்களிடையே ஒற்றுமையை பேணவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே பார்வை 2 இல் காணும் இவ்வியக்கக

Scanned with OKEN Scanner

செயல்முறைகளின் வாயிலாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, பார்வை 3 இல் காணும் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு , மேற்படி ஒருநபர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட , சில பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது.

<u>வழிகாட்டு நெறிமுறைகள்</u>

1. <u>பள்ளிகளில் சாதிய ரீதியான பாகுபாடு(Action against communal bias in schools):</u>

சாதி அல்லது வகுப்புவாத எண்ணத்தை வெளிப்படுத்தும் அல்லது தீங்கு விளைவிக்கும் வகையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியர்கள் தொடர்ந்து அப்பள்ளியில் தொடர அனுமதிக்கப்படும் நிலையில், பள்ளிகளின் நம்பகத்தன்மை குறைந்து பள்ளி வளாகத்தில் பதட்டம் அதிகரிக்கும் வாயப்பு உள்ளது. எனவே, சாதி அல்லது வகுப்புவாத எண்ணத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தும் ஆசிரியர் மீது பெறப்படும் புகார் குறித்து முதன்மைக் கல்வி அலுவலர் உடனடியாக விசாரணை மேற்கொண்டு, மேற்படி ஆசிரியர் உடனடியாக அப்பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்கு மாற்றப்படல் வேண்டும். இது தொடர்பான அறிக்கையினை இவ்வியக்கத்திற்கு அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. .

2. <u>சாதிய அடையாளங்களை மந்தனமாக வைத்திருத்தல் (Confidentiality of Caste Identity):</u>

மாணவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வழங்கக்கூடிய தேவையான கல்வி உதவித்தொகை விவரங்கள் மந்தனமாக பராமரிக்கப்படல் வேண்டும். இதுபோன்ற விவரங்களை சேகரிக்கும்போதோ அல்லது உதவித் தொகைகள் வழங்கப்படும் போதோ, சார்ந்த மாணவர்கள் தனித்தனியாக தலைமை ஆசிரியர் அலுவலகத்திற்கு நேரில் அழைக்கப்பட்டு இவ்விவரங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும். மேலும், இது தொடர்பாக பேணப்படும் பதிவேடு உள்ளிட்ட விவரங்களை வெளிப்படையாக பொதுவெளியில் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்துதல் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Scanned with OKEN Scanner

3. <u>மகிழ் முற்றம் (Magizh Muttram Programme)</u>

2024-25 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில், பள்ளிக் கல்வித் துறை மானியக்கோரிக்கையின் போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து பள்ளிகளிலும் " மகிழ் முற்றம் " எனும் மாணவர் குழு (House System) அமைப்பு செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்கள். இத்திட்டத்தின் குறிக்கோள்களான தலைமைத் திறன், குழுவாக இணைந்து செயல்படுத்துதல், சமூக மனப்பான்மை, ஒற்றுமை உணர்வு போன்ற குணங்களை வளர்த்துக்கொள்ளவும் மற்றும் மாணவர்கள் தங்கள் பள்ளி நிகழ்வுகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு எதிர்காலத்திற்கான திறன்களை வளர்த்துக்கொள்ள உதவும் ஒரு தளமாகவும் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான 2025-26ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்:32841/எம்1/இ1/2025, நாள்:02.07.2025 வாயிலாக அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது .

மகிழ் முற்றம் திட்டம் மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்க உதவும் நல்ல வாய்ப்பாக உள்ளது. இதன் மூலம் மாணவர்கள் சாதி,இன உணர்வினை விடுத்து தங்கள் சார்ந்த மகிழ் முற்றம் குழுவின் வெற்றிக்காக பாடுபட முடிகிறது. இத்திட்டத்தினை பள்ளிகளில் முன்னுரிமை அளித்து செயல்படத்திடவும் அவ்விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிடவும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

4. <u>பள்ளிகளில் மாணவர்களுக்கு தொலைபேசி பயன்பாட்டுக்கு தடை Ban on Mobile Phones in Schools</u>:

பள்ளிகளில் மாணவர்கள் தொலைபேசி பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டு, தற்போது இந்நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இருப்பினும், பள்ளிகளில் மாணவர்கள் தொலைபேசி பயன்படுத்துவதை அறியப்படும் நிலையில், அத்தொலைபேசி தலைமை ஆசிரியராலோ/ வகுப்பு ஆசிரியராலோ பறிமுதல் செய்யப்பட்டு, அத்தொலைப்பேசியினை சார்ந்த பெற்றோரிடம் ஒப்படைத்தல் வேண்டும். மாணவர்கள் தொலைபேசி பயன்படுத்துவது தொடர்பாக தக்க அறிவுரையினை மாணவர்களுக்கு வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Scanned with OKEN Scanner

5. <u>அறநெறி வகுப்புகள் Araneri Classes:</u>

அரசாணை (நிலை) எண் 51 பள்ளிக் கல்வி (ERT) துறை நாள்.21.03.2017 ன்படி, பள்ளிகளில் திருக்குறள் அறநெறி வகுப்புகள் நடத்திட ஏற்கனவே இவ்வியக்கக 25.06.2025 நாளிட்ட செயல்முறைகளின்படி விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழிகாட்டுதல்களை தவறாது பின்பற்றிட மீளவும் அறிவுறுத்தப்படுகிறது.

6. <u>மாணவர் மனசு Student Grievance Boxes:</u>

மாணவர் மனசு புகார் பெட்டியானது வாரம் ஒரு முறை பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் முன்னிலையில் திறந்து, தபால்களின் எண்ணிக்கையை பதிவு செய்து, புகார்கள் மாணவர் பாதுகாப்பு ஆலோசானை குழு (students safeguard advisory committee) விசாரணை செய்து, இப்புகார் குறித்து விசாரணை அறிக்கையினை மாவட்டக் கல்வி அலுவலர் /முதன்மைக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பித்திடல் வேண்டும். இதன் மீது மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலரால் தொடர் நடவடிக்கை எடுத்திடல் வேண்டும்.

மேற்காணும் நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறும், இதில் எந்தவித சுணக்கமும் இன்றி செயல்படுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்செயல்முறை ஆணையினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சார்பு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இயக்குநர்

03.09.25

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

அரசு முதன்மைச் செயலாளர்,

பள்ளிக் கல்வித் துறை,தலைமைச் செயலகம்,சென்னை–09.

Scanned with OKEN Scanner